போல்ஷ்விக் முறை.

:o:

(ஓர் தர்க்கம்)

ஆக்கியோன்:

சே. நரசிம்மன் M. A.

1934.

விலை] [அணா 1.

போல்ஷ்விக் முறை.

(ஓர் தர்க்கம்)

ஆக்கியோன்:

சே. நரசிம்மன் M. A.

வெளியிடுவோர்:

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

1934.

உண்மை விளக்கம் பிரஸ்,
ஈரோடு.

போல்ஷ்விக் முறை.

:0:

(ஓர் தர்க்கம்)

1924-ம் வருடம் தோழர் பர்ட்ரண்டு ரஸ்ஸல் [Bertrand Russel] அமெரிக்காவுக்குப் போயிருந்தபொழுது அத்தேசத்திலுள்ள "பொது சமாச்சார விளக்க" சங்கத்தின் ஆதரவின்கீழ் தோழர் ஸ்காட்நியரிங்குடன் [Scott Nearing] ஒரு டிபேட் [Debate]செய்தார். தோழர் சாமுயல் அண்டர்மியர் அன்று அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

தலைமைவகித்த தோழர் சாமுயல் அண்டர்மியர் அவ்விவாதம் ஆரம்பிக்கும் முன்னர் சொன்னதாவது:— மிகவும் பெயரும், புகழும் வாங்கிய இவ்விரண்டு பெரியார்களும் உலக முன்னேற்றத்திற்கே முக்கியமான இச் சமாசாரத்தைப்பற்றி என் தலைமையின்கீழ் பேச ஒப்புக்கொண்டது எனக்கு மிகச் சந்தோஷத்தை அளிக்கின்றது. இருவரும் மிகப்படித்த தீர்க்கதரிசிகள். தங்களுடைய சொந்த நன்மையை உலக மேம்பாட்டிற்காகவும், தாங்கள் எது நியாயம், சத்யம் என்று நினைக்கின்றார்களோ அதை நிலைநாட்டுவதற்கும் பெரும் தியாகம் செய்தவர்கள். தவிரவும் வீண் பிடிவாத நம்பிக்கையில்லாமல் பொது ஜனங்களின் நன்மையையே எக்காலத்திலும் தியானித்துவரும் பெரும் வீரர்கள்; சாதாரண மனிதனுக்குச் சற்றும் புரியாத தத்துவ சாஸ்திரங்களிலும், இன்னும் மற்றக் கலைகளிலும் நுட்பமான பல புத்தகங்களை எழுதிய சிரேஷ்டர்கள்.

அவர்கள் இருவரும் "போல்ஷ்விக் அரசாட்சி எல்லா தேசங்களிலும் நன்மை பயக்குமா?" என்பதைப்பற்றிப் பேசப்போகிறார்கள். பல தினசரிகளிலும் பத்திரிகைகளிலும் இச்சமாச்சாரத்தைப்பற்றி பலர் எழுதியிருக்கின்றனர். இவற்றில் சில சமாச்சாரங்கள் வெறும் கதைகள். இன்னும் பல போல்ஷ்விக் அரசாட்சியை வெறுக்கும் பலரின் கட்டுரைகள். சில போல்ஷ்விக் அரசாங்கத்தாரால் வெளியேற்றப் பட்ட பிரபுக்களால் இயற்றப்பட்ட நூல்கள். மற்றும் சில போல்ஷ்விக் அரசாட்சியில், சமதர்மதத்துவங்கள் அனுஷ்டிக்கப்படுவதால், அது தங்கள் நாடுகளில் நடத்தப்பட வேண்டுமென்ற ஆசையை உடைய பல அபிமானிகளின் கட்டுரைகள்.

தோழர் ஸ்காட்நியரிங், போல்ஷ்விக் அரசாட்சி மேற்கு தேசங்களிலும் நன்மை பயக்கும் என்ற கக்ஷியை விளக்கிச் சொல்லுவார். பின்பு தோழர் பர்ட்ரண்டு ரஸ்ஸல் போல்ஷ்விக் அரசாட்சி மேற்கு தேசங்களில் நன்மை பயக்க இடம் இல்லை என்று மறுத்துப் பேசுவார். பின்பு ஸ்காட் நியரிங், பர்ட்ரண்டு ரஸ்ஸல் எடுத்துக்காட்டிய கூற்றுகளை மறுத்துப் பேசுவார். கடைசியாகப் பர்ட்ரண்டு ரஸ்ஸல் பதிலளிப்பார்.

தோழர் சாமுயல் அண்டர்மியர் பின்பு தோழர் ஸ்காட் நியரிங்கை போல்ஷ்விக் அரசாட்சி மேற்கு தேசங்களில் நன்மை பயக்கக் கூடுமென்பதைப் பற்றி பேசச் சொன்னார்.

தோழர் ஸ்காட்நியரிங் பேசியதாவது:—

சோவியத் அரசாட்சி முறைமேற்குதேச நாகரீகமுறைகளுக்குப் பொருந்துமா என்பதுதான் கேள்வி. மேற்குத் தேச நாகரீகமென்றால் தற்காலத்தில் இங்கிலாந்து, அமெரிக்

கா, பிரான்சு இன்னும் மற்ற தேசங்களில், குடியரசால் ஏற்படும் ராஜீய நிலைமையாலும், முதலாளித்வத்தால் ஏற்படும் பொருளாதார முறைகளாலும் அவைகளுக்கேற்ற சமூகக் கட்டுகளாலும்ஏற்படும் நாகரீகமே.

சோவியத் அரசாட்சி முறை நம் தேசத்தில், மேல் நாடுகளில் அதிக நன்மையைக் கொடுக்கும் என்று சொல்வதற்கு முன்னர் நான் மூன்று சமாசாரங்களை விளக்கவேண்டும். முதலாவது எக்காரணத்தால் ஓர் அரசாங்க முறை ஒரு தேசத்துக்குத் தகுந்ததாக விருக்கின்றது? இரண்டாவது, சோவியத் அரசாங்க முறை என்றால் என்ன? மூன்றாவது ஏன் அம்முறை மேற்குத் தேசங்களுக்கு நன்மைபயக்கும் என்பவையே.

முதலாவது எக்காரணத்தால் ஓர் அரசாங்க முறை ஒரு தேசத்துக்குத் தகுந்ததாகவிருக்கின்றது? அரசாங்க முறைகள் சமூக ஸ்திதிக்குத் தகுந்தவைகளாக விருக்கவேண்டும். உதாரணமாக ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் ஐரோப்பா முழுவதும் [Feudal] பியூடல் சமூக முறையில் இருந்தது. அம் முறைப்படி வெகு சிலருக்குப் பூமிகளெல்லாம் சொந்தம். தேசத்திலுள்ள மற்றவர்கள் அப் பூமிகளைச் சாகுபடிசெய்து, பூமிக்கு சொந்தக்காரரான வெகு சிலருக்குத் தொண்டுசெய்து வாழ்ந்தனர். இந்தப பூமிக்காரர்கள் தான் அரசாங்கத்தை நடத்தினர். ஏனெனில் அவர்கள் கையில்தான் பொருள் ஈட்டுவதற்கு வேண்டிய முக்கிய கருவி அக்காலத்திலிருந்தது.

பின்பு இவற்றிடையே கைத்தொழில்கள் ஏற்பட்டன. இக்கைத் தொழில்களால் ஏற்பட்ட சாமான்கள் விற்கவும், வாங்கவும் வியாபாரம் ஏற்பட்டது. அவற்றைப் பல நாடுகளில் விற்கத் துறைமுகங்களும், கப்பல்களும் உண்டாயின. இத்துறைமுகங்களிலும் பட்டணங்களிலும் முன்போல்

பூமிக்காரன், தொண்டு செய்பவன் என்ற வித்தியாசம் போய் ஓர் புதிய சமூக அமைப்பு ஏற்பட்டது.

பின்பு சாஸ்திரப் பயிற்சியால் இயந்திரங்களும், பல மெஷின்களும் ஏற்பட்டபொழுது மேற்குத் தேசங்களில் விவசாயம், 1000-வருடங்களுக்கு முன்பிருந்த உயர்ந்த பதவியிலில்லை. வியாபாரம், கைத்தொழில் பாக்டெரிகள், தொழிற்சாலைகள் இவை ஏற்பட்டவுடன் தேசத்தில் முன்போல் பூமிக்காரன், குடியானவன் என்ற பிளவு போய், முதலாளி கூலிக்காரன் என்ற பிளவு ஏற்பட்டது. அது தற்காலத்தில் எல்லா மேற்குத் தேசங்களிலும் நன்கு பரவியிருக்கிறது.

இங்கிலாந்தில் பெயருக்கு ஓர் மன்னர் வெகு டாம்பீகத்துடன் அரசாளலாம். பிரான்சிலும், அமெரிக்காவிலும் குதூகலத்துடன் குடிகள் பிரசிடெண்டுகளை ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கலாம். ஆனால் ராஜ்யத்தை நிஜமாக ஆள்பவர் எவர்? முதலாளிகளும், பணக்காரர்களுமே. ராஜ்ய முறைகள் அவர்கள் நன்மைக்காகத்தான் ஏற்படுத்தப்படுகின்றன. அவர்கள் சொற்களுக்கிணங்க ராஜ்ய இயந்திரம் ஓட்டப்படுகின்றது.

ஆகையால் எக்காரணத்தைக் கொண்டு ஓர் அரசாங்க முறை ஒரு தேசத்துக்குத் தகுந்ததாகவிருக்கும்? அத்தேசத்து ஜனங்களின் வர்க்கத்தாலல்ல [Race.] அவர்கள் பேசும் பாஷையை ஒத்ததல்ல. அவர்கள் தழுவும் மதத்தாலல்ல. அரசாங்கமுறை பொருளாதார முறையையும், சமூக விருத்தியையும் ஒத்திருக்கின்றதேயன்றி வேறல்ல. தற்காலத்தில் ஐரோப்பா முதலாளித்வ முறையைக் கையாண்டு வருகின்றது. அதற்குத் தகுந்த ராஜ்ய இயந்திரத்தையும் தேசம் தேசமாக ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

பின்பு ஏன் ருஷ்யாவில் மட்டும் சோவியத் கவர்ன்மெண்ட் ஏற்பட்டது?

என்ன பெயர்கள் வைத்துக்கொண்டபோதிலும் அரசாங்கமுறைகள் பொருளாதார விருத்தியை ஒத்திருக்கின்றதல்லவா? ஆனால் சில சமயங்களில் அரசாங்க முறைகள் திடீரென்று உடைந்துபோய் மறைகின்றன. உள்ளிருந்தே வியாதி பீடித்து, முற்றி, 1789-ம் ஆண்டில் பிரான்சு தேசத்தில் ஏற்பட்டதுபோல் பெரும் குழப்பம் ஏற்படலாம். வெளியிலிருந்து பல எதிரிகள் தோன்றி சற்று வியாதி பீடித்திருந்த பொருளாதார சமூகக் கட்டை தகர்க்கலாம். ரோம ஏகாதிபத்யம் பின்சொன்ன காரணத்தால் தான் சிதறிப் போயிற்று.

ருஷ்யாவில் சுமார் நூற்றுக்கு எண்பத்தைந்து நபர்கள் விவசாயிகள். சற்றேறக்குறைய ஆயிரம் வருடங்களுக்குமுன் ஐரோப்பாவில் நிலச்சுவான் குடியானவன் என்ற இரு பிளவுகள் இருந்தது போல் ருஷ்யாவில் 1914-ம் வருடம் இருந்தன. ஆகையால் 80-லக்ஷம் சதுரமைல் விஸ்தீரணமுள்ள ருஷ்யாவில் 13-கோடி விவசாயிகளை மிரட்டி, வாட்டிவந்த இந்த வெகு சிறிய நிலச்சுவான் தார்கள் இந்தப் பழைய நாகரீகத்தைவிட்டு மீளமுடியாமலிருந்தனர். கோகால் [Gogal] புத்தகங்களை வாசித்திருப்பவர்கள் இந்த ருஷ்ய அதிகாரிகளையும், பிரபுக்களையும்பற்றி நன்கு தெரிந்திருக்கலாம். இந்த அதிகார வர்க்கத்தினரும், அவர்களைச் சூழ்ந்திருந்த தட்டாரப் பூச்சிகளும், ஜெர்மனி, பெல்ஜியம், இங்கிலாந்து இன்னும் மற்ற தேசங்களின் நூதனப்பொருள் விருத்தி முறைகளைத் தங்கள் தேசத்தை எட்டவொண்ணாது தடுத்தனர்.

1905-ம் ஆண்டிற்குப் பின்பு சில முதலாளிகள் ருஷ்யாவிலிருக்கும் எண்ணிறந்த சுரங்கங்களையும், மற்ற விளைபொரு

ள்களையும் உபயோகிக்க முயன்றனர். ஆயினும் இந்தப் பழைய ருஷ்ய கவர்ண்மெண்டு சற்றும் பிரயோஜனமற்ற தாகவிருந்ததால் வேகமாகத் கைத்தொழில்கள் விருத்தியடை யவில்லை. இச் சமயத்தில்மகாயுத்தம் ஆரம்பித்தது.

சண்டை என்ற சண்டமாருதம் ருஷ்யாவைத் தாக்கின பொழுது ருஷ்யா திடீரென்று கீழேவிழுந்தது. போல்ஷ்வி காரர்கள் ருஷ்ய அரசாங்க வர்க்கத்தினரை ஒழிக்கவில்லை. அரசாங்க வர்க்கத்தினர் தங்களையே நாசமாக்கிக்கொண்ட னர். 1914 முதல் 1917 வரை போர் முனைக்கு சிப்பாய்களை அனுப்பித்து அங்கு அவர்களை போஷிப்பதென்றால் அது சாமான்ய காரியமல்ல. ருஷ்யப் பொதுஜனங்கள் பட்டினி கிடக்கவேண்டியிருந்தது. அவர்களுக்கு துணிகளில்லை. அவ சியமான இயந்திரங்களில்லை. இருப்புப்பாதைகளில் நிலக்கரி இல்லாததாலும், வண்டிகள் தளர்ந்து போய்விட்டதாலும், போதுமான ரோலிங்ஸ்டாக் (Rolling stock) இல்லாத தாலும் ரயில்கள் போகவில்லை. 1915 முதல் 1917-க்குள் ருஷ்ய பொதுஜனங்களின் வாழ்வு மிகக் கேவலமாய்விட்டது. மெஷின் சாமான்களின் விலை வெகு விரைவாக ஏற ஆரம்பித் தது. நெருப்புப்பெட்டி, மில்துணி, சர்க்கரை இவைகளெல் லாம் அகப்படுவதே அரிதாய் போய்விட்டது.

ருஷ்ய ஜனங்கள் போர் முனையினின்று பின் வாங்கின பொழுது அவர்களுக்கு இந்த அசட்டு சண்டையில் தாங்கள் கலந்துகொள்வதால் சற்றும் பிரயோஜனமில்லை என்று நன்கு தெரிந்தனர். 1917ம் வருடம்மார்ச் கெரன்ஸ்கி (Kerensky) ராஜ்ய பாரம் வகித்தபொழுது பொருளாதார நிலைமையிலும், ராஜ்ய நிலைமையிலும் மிகுந்த கலவரத்தில் மூழ்கிய ருஷ்யா வை ஆள எத்தனித்தார்.

பழய சமூகக்கட்டு 1917-ம் வருடம் அழிந்து போன பொழுது ருஷ்யாவின் 13 கோடி ஜனங்கள் ஒரு புதிய கட்டை ஏற்படுத்தவேண்டியிருந்தது. மனிதன் சமூக வாழ்க்கையில் விருப்பப்படும் பிராணி அல்லவா? இந்த 13 கோடி ஜனங்கள் அந்த பழைய கட்டு தளர்ந்து புதுக்கட்டுக்காக தட்டித்தடுமாறும் பொழுது போல்ஷ்விக் அரசாட்சி முறை தோன்றியது. அம்முறை ருஷ்யாவுக்கு வந்ததின் காரணம் ருஷ்யாவில் பழையமுறை உடைந்து போனதின் காரணமேயன்றி வேறல்ல. இங்கிலாந்து அந்த ஸ்திதியிலிருந்திருந்தால் போல்ஷ்விக் முறை அங்கும் தோன்றியிருக்கும். ஜர்மெனி பூரணமாக தோல்வியடைந்து, பிரான்ஸின் சேனையால் சிறிது காலம் ஆளப்பட்டிருந்தால் அங்கும் அந்த போல்ஷ்விக் முறை தோன்றியிருக்கும்.

போல்ஷ்விக் முறை என்றால் என்ன?

அதுதான் இரண்டாவது கேள்வி. எனக்கும் தோழர் பர்ட்ரண்டு ரஸ்ஸலுக்கும் அதில் பெரும் வித்யாசமிருக்குமென்று நான் நம்பவில்லை. போல்ஷ்விக் முறை சாதாரண லேபர் முறை (Socialism) அல்லது தீவிர பொதுவுடமை முறையாவது (Communism) அல்ல. அது ஒரு பெரும் பாலம். அந்தபபாலம் முதலாளித்வத்திற்கும், தீவிரப்பொதுவுடமைக்கும் நடுவிலிருக்கும் இருண்ட பாதாளத்தை கடக்கின்றது. முதலாளித்வத்திலிருந்து தீவிர பொது உடமையை நோக்கிச் செல்லுகின்றது.

ஆகையால் அதிகாரமெல்லாம் ஒருங்கே கூட்டப்பட்டிருக்கின்றது. ஏகாதிபத்ய முறையைக் கையாளுகின்றது. கம்மியூனிஸ்ட் கக்ஷியைச் சேர்ந்த 600,000 நபர்கள் இந்த ஏகாதிபத்யத்தை ஒரே மனதுடன் நடத்துகின்றனர். சாதாரண

ஜனங்களின் பொருளாதார நிலைமை மேம்பாடடைய வேண்டு மென்பதும், இச்சனங்களை முதலாளிகள் கொள்ளையடிக்க விடக்கூடாதென்பதுந்தான் இவர்கள் நோக்கம். இப் போல்ஷ் விக் அரசாட்சி கைத்தொழில் கூலியாள்களுடையவும் சில நன் குணர்ந்த விவ்சாயக் கூலிகளினுடையவும் ஏகாதிபத்ய மென்று சொல்லலாம்.

மற்றைய கவர்ன்மெண்டுகளுக்கும், ருஷ்ய கவர்ன்மெ ண்டுமுறைக்கும் மூன்றுவித வித்யாசங்களுண்டு. பிர்க்காக்கள் ஸ்தலமுறையாவது, தாலூகா முறையாவது அநுஷ்டிக்கா மல் தொழில் முறையை அனுஷ்டிக்கின்றன. (மதராஸ் சட்டசபைக்கு மதராஸ் ராஜதானியை ஜில்லா, ஜில்லாவாக பிரித்து சட்டசபைக்கு மெம்பர்கள் அனுப்பப்படுகிறார்கள். ஆனால் ருஷ்யாவில் ரயில்வே தொழிலாளர்கள், கிளார்க்குகள், என்ஜினியாகள், டிராம் ஓட்டுபவர்கள், மில் தொழிலாளிகள், உபாத்தியாயர்கள், கக்கூஸ் வாருபவர்கள் என்று தொழில் விகிதப்படிதான் சட்டசபைக்கு மெம்பர்கள் அனுப்பப்படு வார்கள்.) இரண்டாவது நாம் ராஜ்ய வாழ்க்கையை சிரமத்து டன் யோசனை செய்து அட்டவணையை வைத்துக்கொண்டு எப்படி நடத்துகிறோமோ அதுபோலவே பொருள் ஈட்டும் முறையையும், சிலவழிக்கும் முறையையும் சரியான வழிக ளில் யோசனை செய்து நடத்துகின்றனர்.

இங்கிலாந்து, ஜெர்மனி, யுனைட்டட்ஸ்டேட்ஸ் இன் னும் மற்ற மேல் நாடுகளில் ராஜீயவாழ்க்கை நன்கு தெளிவுற, பிளான் செய்யப்பட்டிருக்கின்றது. ருஷ்யர்கள் தினசரி வாழ் க்கையையும் அப்படியே நடத்துகின்றனர். நாம் சிறிய பாங் கர்களையும், முதலாளிகளையும், தொழிற்சாலைக் காரர்களையும் அனேகமாக அவர்கள் இஷ்டம் போல் அவர்கள், அவர்கள்

தொழில்களை நடத்தவிட்டிருக்கின்றோம். ராஜீய வாழ்க்கையில் கொள்ளைகளை நாம் எப்படி நிறுத்திவிட்டோமோ அம்மாதிரியே, தொழில் முறைகளிலும், பாங்கி நடத்துவதிலும், சுரங்க வேலைகளிலும் ருஷ்யர்கள் லாபக்கொள்ளையை நிறுத்திவிட்டனர்.

மூன்றாவதாக அவர்கள் முக்கிய ராஜீய சட்டப்படி "வேலைசெய்யாதவனுக்கு கஞ்சி கிடையாது" நம் தேசங்களிலோ பெரிய முதலாளிக்குத்தான் பெரிய வருமானம். இவ்வருமானத்துக்காக அவன் ஒரு துரும்பைக்கூட நகர்த்தியிருக்கமாட்டான். சோவியத் சட்டப்பிரகாரம் அந்த மனிதனுக்கு ஓட்டுக்கூட கிடையாது. அவன் ஒரு உத்தியோகத்தையும் வகிக்கமுடியாது. அவன் அவனுடைய சொத்தைக்கூட பலவிதங்களில் உபயோகிப்பதற்கு தடுக்கப்படுவான்.

இம்மூன்று விதங்களில் சோவியத் அரசாட்சி மற்றய அரசாட்சியிலிருந்து வித்தியாசப்படுகின்றது. முதலாவது தொழில் பிரச்னைகள். இரண்டாவது பொருள ஈட்டும் முறைகளும் செலவிடும் முறையும் பிளான் செய்யப்படுதல். மூன்றாவதாக ஒவ்வொரு ஜீவனும் (தேக அசௌக்கிய நாள்கள் தவிர) ஜனசமூகத்திற்கு எவ்விதமாகவானாலும் தொண்டு செய்திருக்கவேண்டும்.

இம்முறையை ருஷ்யர்கள் வெகு இலகுவில் கையாளவில்லை. இதற்காக வெகு பிரயாசப்பட்டனர். லக்ஷக்கணக்கான ஜனங்களை இதற்காகக் கஷ்டப்படுத்தியும் இருக்கின்றனர். ருஷ்ய போல்ஷ்விக்கக்ஷியைச்சேர்ந்த 6-லக்ஷம் நபர்களும் இதற்காக தங்கள் ரத்தத்தையும், சந்தோஷ வாழ்க்கையும் பொருள்படுத்தாது செலவழித்தனர். நாமோ குதூகல

மாக சினிமாக்களுக்கும், டிராமாக்களுக்கும், நாட்டியக்கச்சேரிகளுக்கும் போய்க்கொண்டிருந்திருக்கின்றோம்.

மேல் நாடுகளுக்கு போல்ஷ்விக் முறை தகுந்ததா? ருஷ்யாவுக்கு எப்பொழுது தகுந்ததாகவிருந்தது? ஜார் சக்கரவர்த்தி படைகளால் சூழப்பட்டு மேன்மையாயிருந்த காலத்திலல்ல. நாற்புறமும் தோற்கடிக்கப்பட்டு, ருஷ்ய தொழிலாளிகளும், வேளாளர்களும், மகாயுத்தம் தங்கள் நன்மைக்காக ஏற்பட்ட சண்டையில்லையென்று தெரிந்தபொழுது தான் ருஷ்ய ஜனங்கள் முக்கியமான மில்சாமான்களும் இன்னும் மற்ற சௌகர்யங்களுமில்லாமல் கஷ்டப்பட்ட பொழுது தான். சமாதானமும், சாம்ராஜ்யமும், இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் எப்பொழுதும் குடி கொண்டிருந்தால் சோவியத் அரசாங்கமுறை வரவும் வராது, வேண்டவும் வேண்டாம். ஆனால் தேசங்களுக்குள் பெரும் சண்டையும், தேசத்துக்குள்ளேயே வகுப்புச்சண்டைகளும் முற்றி பொருளாதாரநிலைமை சீர்குலைந்தால் ருஷ்ய முறையை அனுஷ்டிக்கவேண்டியது தான்.

தற்காலிக முதலாளித்வ சாம்ராஜ்யம், மேலும், மேலும் விருத்தியடையக்கூடுமா? என்னை இன்று மறுத்துப் பேசபோகிற தோழர் பர்ட்ராண்டு ரஸ்ஸல் சமீபத்தில் வெளியிட்ட "கைத்தொழில் நாகரீகம்" என்னும் புத்தகத்தைப்பாருங்கள். (The Prospects of Industrial civilization) மேலும் சந்தேகமிருந்தால் வெப் தம்பதிகளின் (Sidney and Beatrice webb) "முதலாளி நாகரீகத்தின் க்ஷீணிப்பு" (The Decay of Capitalist civilisation) என்னும் புத்தகத்தை படியுங்கள். அதற்குமேலும் சந்தேகமிருந்தால் இத்தாலிய பிரதம மந்திரியாயிருந்த தோழர் நிட்டி (Sgr

Nitti) யின் "ஐரோப்பாவின் க்ஷீணிப்பு" (The Decadence of Europe) என்னும் புத்தகத்தை படியுங்கள். அதுகூட போதாதென்றால் டாஸ்ரிப்போர்ட் (Dawes Report) அல்லது ஆயுதப்பரிஹாரண மகாநாட்டு ரிப்போர்ட்டையாவது வாசியுங்கள். வெகு சீக்கிரத்தில் உலக ஏகாதிபத்தியங்கள் அடுத்த மகாயுத்தத்துக்குத் தயாராகின்றன.

பணத்தில் கொழுத்த அமெரிக்காவில் நாம் வசிக்கின்றோமென்று நிம்மதியாக இருந்துவிடாதீர்கள். ஜெர்மனியர்களும் அப்படித்தான் 1913ம் வருடம் நினைத்தனர். அது சுமார் 15 வருடங்களுக்குமுன்புதான். ருஷ்யா சக்ரவர்த்தியும் அப்படித்தான் நினைத்திருப்பார். பத்துவருடங்களுக்குப் பின்பு என்ன நடக்குமோ யாருக்குத்தெரியும்?

ஆனால் முதலாளித்வமுடைந்து ஐரோப்பாவிலும், அமெரிககாவிலும் ஜனங்கள் கஷ்டப்படும்பொழுது இந்த ருஷ்யர்களைப் போல் அவர்கள், தைரியத்துடனும், வீரத்துடனும், ஒன்று சேர்ந்து கொஞ்சக்காலத்திற்கு வீண் அசடர்களை பிதற்றக்கூட விடாமல் ஒரே மனதாய் பொதுவுடமைத் தத்துவங்களை பிரயோகித்துப் பெரும் புயல்காற்றால் இடிந்துபோன நம்நாகரீகத்தை புதுப்பிப்பார்கள் என்பதற்குச்சிறிதும் ஐயமில்லை.

பர்ட்ரண்டு ரஸ்ஸலின் பதில்.

தோழர் பர்ட்ரண்டுரஸ்ஸல் ஸ்காட்நியரிங்கை மறுத்துப் பேசியதின் சாராம்சமாவது:- "எனக்கு தோழர் ஸ்காட்நியரிங் வைத்திருக்கும் வேலை மிகக் கடினமான வேலை. நம்முடைய தொழில் நாகரீகம் பல விஷங்களை உற்பத்திசெய்கின்றதென்றும், அவ்விஷங்களை சரிவர அப்புறப்படுத்தி

சிகிச்சை செய்யாவிடின் மனித முயற்சியால் ஏற்பட்ட இந்த மேற்கு தேசங்களின் நாகரீகம் வெகு சீக்கிரம் க்ஷீணிக்குமென்றும் நானே பலதடவை, புத்தகங்களில் எழுதியிருக்கின்றேன். தோழர் ஸ்காட்நியரிங் என் வார்த்தைகளைக் கொண்டே என்னைச் சுட்டிக் காண்பிப்பதுமல்லாமல் உங்களை உற்சாகப்படுத்த வேண்டிய காரியத்தையும் எனக்குக் கொடுத்திருக்கின்றார்.

நாம் பேசவேண்டிய சமாச்சாரம் என்ன? மேற்குதேச நாகரீகம் சமீபத்தில் சண்டைகளாலாவது, இன்னும் மற்றக் காரணங்களாலாவது நாசமடையுமா? என்பதுதற்பொழுது நாம் விசாரிக்கவேண்டிய கேள்வியல்ல. நாம் வெகு அபாயகரமான ஸ்திதியிலிருக்கின்றோமென்றும், ஆராய்ச்சியால் ஏற்பட்ட கல்வியை நன்கு உபயோகப்படுத்தாமலிருந்தால் நம் நாகரீகம் நாசமடையுமென்றும் நான் ஒப்புக்கொள்கின்றேன். ஆனால் நாம் பேசவேண்டிய கேள்வி: நம் நாகரிகமே நாசமடையக்கூடிய அபாயகரமான கலவர நாள்களிலாவது, மற்ற எக்காலத்திலாவது சோவியத் ராஜாங்கமுறையை நாம் கையாளுவோமா? அப்பேர்ப்பட்ட கலவரம் ஏற்பட்டாலும் சரி, ஏற்படாமற்போனாலும் சரி, சோவியத் அரசாங்க முறையை மேற்குத் தேசங்கள் கையாளமாட்டா என்பது திண்ணம்.

தோழர் ஸ்காட் நியரிங் கார்ல்மார்க்ஸ் (Karl Marx) சொல்லியபடி அரசாங்கமுறை, பொருளாதார முறையையும், சமூகவிருத்தியையும் ஒத்திருக்கின்றதென்று சொன்னார். சரி அதை ஒப்புக்கொள்வோம். போல்ஷ்விக்காரர்கள் ராஜ்ய இயந்திரத்தை ருஷ்யாவில் பிடித்துக்கொண்டபொழுது ருஷ்யக் கைத்தொழில், தற்காலத்தில் நம் தேசங்

களில் கைத்தொழிலிருக்கும் ஸ்திதியைவிட வெகு வித்தியாசமாக விருந்ததல்லவா? அங்கே முதலாளித்வம் அப்பொழுது சிறுபகுதி. கைத்தொழிலெல்லாம்குடிசைக் கைத்தொழில்கள். மிஷின்களும், இங்கிருப்பதுபோல் நுட்பமான இயந்திரங்களும் கிடையா. நீங்கள் என்னை நம்பவேண்டாம். லெனினை (Lenin) வாசியுங்கள். புதிய பொருளாதார முறை (New Economic Policy) கையாள வேண்டுமென்று அவர் பேசியதைப் படியுங்கள். ருஷ்யாவில் குடிசைக் கைத்தொழில்களும், வேளாள விவசாயமும் குடிகொண்டிருப்பதைப்பற்றி அவர் விசனிக்கின்றார். ருஷ்யா மேற்குதேசங்களின் மிஷின் முறைகளைக் கையாளாது பண்டைக்கால முறைகளைப் பின் பற்றுவதைக் கண்டிக்கின்றார். ஆகையால் நாம் தோழர் நியரிங் சொல்வதை ஒத்துக்கொண்டால் ருஷியா பொருளாதார ஸ்திதிக்குத்தகுந்த கவர்ன்மெண்டு நம் பொருளாதார ஸ்திதிக்குத் தகுந்த கவர்ன்மெண்டைவிட வெகு வித்தியாசமாக விருக்க வேண்டுமென்பதற்கு ஐயமில்லை.

இங்கிலாந்திலும், ஆலிவர் கிராம்வல் (Oliver cromwell) ராஜியபாரம் சோவியத் அரசாட்சி முறையைத்தான் பின்பற்றியது. அது அக்காலத்தில் இங்கிலாந்து பொருளாதார அபிவிருத்திக்கு ஒத்திருந்தது. சிலர் ருஷியாவைப்போல் முதலாளித்வம் இங்கிலாந்தில் அக்காலத்தில் இல்லையென்று சொல்லலாம். ரயில்கள் கிடையாது. எண்ணெய்ச் சுரங்கங்களுமில்லை. ஆனால் வாசிக்கவும்,எழுதவும் தெரியாத ஒரு பெரிய ஜனத்தொகை இருந்தது. நிலச்சுவான் தொண்டு செய்யும் ஏழை என்ற பழைய பிரிவினை க்ஷீணித்துக்கொண்டு வந்தது. ஒரு மத்திய வகுப்பு இருதாரத்தாருக்கும் இடை

யே விருத்தியடைந்து கொண்டுவந்தது. தவிரவும் தற்பொழுது ருஷியாவில் இருப்பதுபோல் க்ராம்வேலுக்கடியில் சாமியார்களடங்கிய ஒருபெரும்சைன்யமிருந்தது. (An army of Saints) ருஷியாவில் அச்சைன்யத்தை சிகப்பு சைன்யமென்று கூப்பிடுகிறார்கள். பெயர்தான் மாறுதல்.

க்ராம்வெல்லின் சாமியார் சைன்யத்தை, ருஷியாவின் சிகப்புசைன்யத்திற்கு ஒப்பிட்டேன். அந்த சைன்யத்தைச் சேர்ந்தவர்கள், புஜ பலத்துக்காகவாவது, குறிபார்த்து நன்கு சுடும் வல்லமைக்காகவாவது சேர்க்கப்படவில்லை. சில தத்வங்களைப் பூரணமனதுடன் ஒப்புக்கொள்வதற்காகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். க்ராம்வெல்லின் சாமியார் சைன்யம் வெகு தீவிர பியூரிடர்களை (Puritans)க் கொண்டு எப்படி ஆரம்பிக்கப்பட்டதோ அம்மாதிரியே ருஷியா சிகப்பு சைன்யம் தீவிர பொதுவுடமைக் கக்ஷிக்காரர்களைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. மேலும் எப்படி போல்ஷ்விக் கக்ஷியினர் அவர்கள் தேசத்துக்குச் சற்றும் தகாத ஜார்சாம்ராஜ்யத்தை கவிழ்க்கப் புறப்பட்டனரோ அதே மாதிரித் தற்கால முதலாளித்வத்தைவிட வெகு கேவலமான அரசாட்சியை தொலைக்கத்தான் க்ராம்வெல்லின் சாமியார் சைன்யம் புறப்பட்டது.

ஆகையால் தோபூர் நியரிங் சொன்னதையே ஒப்புக்கொண்டு நாம் ஆராய்ந்தால் ருஷியாவின் பொருளாதார சமூகவிருத்திக்குத் தகுந்த கவர்ன்மெண்டு, பலவிதங்களில் அதிகநாகரீகத்தை அடைந்திருக்கும். நம் சமூகத்துக்குத்தகுந்ததாயிருக்க முடியாது. நான் நம் தேசங்களில் புரட்சி ஏற்படாது என்று சொல்ல வரவில்லை. ஒரு தேசம் சண்டையில் தோல்வி அடைந்தால் நிச்சயம் தற்காலத்தில் புரட்சி

ஏற்படும். அம்மாதிரி புரட்சி ஏற்படின் பின்புவரும் கவர்ன் மெண்டு ருஷிய கவர்ன்மெண்டு மாதிரியிருக்குமென்று மட் டும் நான் நம்பவில்லை.

தோழர் நியரிங் ருஷிய கவர்ன்மெண்டைப்பற்றி விஸ்த ரிக்கும்போது அந்தக் கவர்ன்மெண்டைக் கிராமத்திலிருந் தும், தொழிற்சாலையிலிருந்தும் வரும் பிரதிநிதிகளால் நிய மிக்கப்பட்ட கவர்ன்மெண்டென்று சொன்னார். நான் அதை ஒப்புக்கொள்ளத்தயாராகவில்லை. இந்த எலெக்ஷனெல்லாம் போலி எலெக்ஷன்கள். எலெக்ஷன்களில் எல்லோருக்கும் தெரியும்படியாக ஓட்டுக் கொடுக்கவேண்டும். தவிரவும் ஒவ் வொருவரும் ஓட்டு செய்யவேண்டும். ஓட்டுசெய்யாவிடிற் கையைத் தூக்கவேண்டும். தவிரவும் கவர்ன்மெண்டிற்கு எதிர்க்கக்ஷியினர் கூட்டங்கூடுவதற்குக்கூட இடம் அகப்படுவ தில்லை. தினசரிப்பத்திரிகைகள் நடத்தமுடியாது.

ஆகையால் இந்த எலெக்ஷன்களைப்பற்றி நாம்கவனிக்க வேண்டாம். நான் இப்படித் தேர்தல்கள் நடத்தப்படுவ தைப்பற்றி அவதூறாகச் சொல்லவில்லை. இங்கு எலெக் ஷன்கள் பணக்காரர்கள் டமாரமடிப்பதுபோல் நடப்பதும் தெரிந்தவிஷயம். நம்கேள்வி: ருஷியாவில் நடந்திருப்பதை நாம் பின்பற்ற முடியுமா? என்பதே.

திரு. நியரிங் காரல் மார்க்ஸை (Karl Marx) ப்பின் பற்றி பொருளாதார காரணங்கள் மட்டுமேசமூக அமைப்பை நிச்சயிக்கின்றன என்று சொன்னார். நான் அதை ஒப்புக் கொள்ளத் தயாராகவில்லை. மதத்தால் ஏற்படும் நம்பிக்கை கள், வர்க்கக் காரணங்கள், புராதன கோட்பாடுகள் இவை எல்லாம் சமூக அமைப்பைப்பாதிக்கின்றன. உதாரணமாக

ருஷிய நாகரீகத்தையும், சீன நாகரீகத்தையும் ஒத்துப்பார்ப்போம். இருதேசங்களுக்கும் பொருளாதார முறையில் சற்றும் வித்தியாசங்கள் கிடையாது. ஆனால் என்னவித்தியாசமானநாகரீகம்! ருஷிய நாகரீகம் 1917-க்குமுன்புமதப்பற்றும், மனிதஉயிரை த்ருணமாகக்கருதும் ராஜாங்க அதிகாரம் ஒருங்கே கூட்டப்பட்ட நாகரீகம். (Highly centralised). சீனர் நாகரீகமோ சற்றும் மதப்பற்றில்லாத, ஆராய்ச்சிக்கேற்ற, ராஜாங்க அதிகாரம் ஓங்காத நாகரீகம். இதற்குக் காரணம் என்ன? தேசீய குணநிசயமும், நூற்றாண்டுகளாக பொதுஜனங்களின் வாழ்கையுமே.

நாம் இருநூற்றைம்பது வருடங்களுக்குமுன்பு, ருஷியாவில் தற்பொழுது 6-லக்ஷம் போல்ஷ்விக்காரர்களால் செய்யப்படும் காரியத்தை செய்திருந்தால் அதிகபலன் கிடைத்திருக்கும். ஆனால் அந்தக்காரியம் இச்சமயத்தில் சற்றும் பொருத்தமில்லை. இருநூற்றைம்பது வருடங்களில் நம் வாழ்க்கையும் தேசீயக்குணங்களும் மாறிவிட்டன. 18-ம் நூற்றாண்டின் நம்பிக்கையற்ற நுட்ப ஆராய்ச்சியும் 19-ம் நூற்றாண்டின் பூரண நம்பிக்கையும், சந்தோஷமும் நம் மனப்பான்மையை மாற்றிவிட்டன.

போல்ஷ்விக் கக்ஷிக்காரர்கள் தாங்கள் சாஸ்திரப்படி நடக்கின்றவர்களென்றும், இயற்கைச் சாஸ்திரங்களுக்கு மாறாக நடக்கின்றவர்களென்றும் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் சரியான சாஸ்திரி என்பவன் யார்? தான் சொல்லும் வார்த்தைகளை நன்குணர்ந்தவனும், சிறிது சிறிதாக ஆராய்ச்சியால் ஏற்படும் நியாயங்களை அவசரப்பட்டுக் கோர்க்காதவனும், பரிசுத்தார்த்த தத்துவங்களை மட்டும் நம்புகிறவனும், சிறிது தெரிந்தவுடன் வெகு நேர்த்தியான கற்பனைகளை ஏற்படுத்த ஆசைப்படாதவனும்தான் பெரிய சாஸ்திரி.

ஆனால் மார்க்சைப் பின்பற்றி சரித்திர முழுவதும் பொருளாதார காரணத்தால்தான் ஏற்பட்டது என்று சொல்பவர்கள் சாஸ்திரிகளாகமாட்டார்கள். மார்க்ஸ் சொன்னதுபோல் உலகம் ஒரே மாதிரிதான் முதலாளித்வத்திலிருந்து ருஷ்யாவைப்போல், போல்ஷ்விக்காரர்கள் கையிலகப்படுமென்று எனக்குத் தோன்றவில்லே. மனிதனின் புத்தியும், வாழ்க்கையும் எண்ணிறந்த விமரிசையுள்ளது. ஒரு மனிதன் மற்ெருரு மனிதனைப்போலில்லே. இருவர் ஒரே பொருளாதார நிலேமையில் இருந்திருந்தபோதிலும் நடத்தையிலும், வாழ்க்கையிலும் மிக வித்தியாசப்படலாம். அம்மாதிரியேதான் இரண்டு தேசங்கள். இரண்டும் ஒரே பொருளாதார நிலைமையிலிருக்கலாம். ஒன்று க்ஷீணிக்கலாம், ஒன்று விருத்தியடையலாம்.

மார்க்சின் உபதேசம் வெகு லகுவாயிருக்கிறது. உலகமும், உலகத்தில் நடக்கும் வைபவங்களும் அவ்வளவு லகுவாக நாம் கருதமுடியாது. உலக முன்னேற்றத்தைப்பற்றி வெகு அழகாகவும், விமரிசையாகவும் பிரசங்கத்தைக் கேட்டால், நாம் இம்மாதிரி அதி சீக்கிரத்தில் முன்னேற்றம் வேண்டுமென்று கூறிய பழைய ஞானிகளைப்பற்றிச் சற்று சிந்திப்போம்.

ஒரு பெரிய கலவரத்துக்குப்பின் ஓர் 'ராமராஜ்யம்' வரப்போகின்றது என்று பிதற்றுபவர் சாஸ்திரியல்ல. ருஷ்யாவில் நடந்ததே நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நான் சொல்வதை விளக்குகின்றது. ருஷ்யாவில் 1917-ம் வருடத்துக் கிளர்ச்சிக்குப் பின்பு பெரிய புணருத்தாரணம் நடக்கப்போவதாகச் சொன்னார்கள். நான்கு வருடம் பூரணப் பொதுவுடமையைக் கையாண்டபின் அவர்கள் அப்பூரணப் பொ

துவுடமையைச் சற்று சாந்தப்படுத்த வேண்டியிருந்தது. நான் பொது உடமை வேண்டாம் அல்லது பலிக்காது என்று சொல்வதாக எண்ணக்கூடாது. எல்லாவற்றிற்கும் ஜனங்கள் தயாராகவிருக்கவேண்டுமென்றும் அப்படித் தயாராக்குவது பல நாட்கள் பிடிக்குமென்றுந்தான் நான் வாதாடுகிறேன்.

ருஷியாவைப் போல்ஷ்விக்காரர்கள் பிடித்துக்கொண்டவுடன் சில வருடங்களுக்குப் பழைய ஜார் சக்கரவர்த்தி [Czar] அரசாண்டதுபோலவே ஆளவேண்டியிருந்தது. கவர்ன்மெண்டு சாரணர்களை உபயோகித்தும், போலீஸ் காரரைக் கொண்டு நாகரிக சட்டங்களுக்கு மாறாக அரஸ்ட் செய்தும், ஜெயிலில் தங்கள் எதிரிகளை அகாரணமாகத் துன்புறுத்தியும், ஜனங்களைத் துப்பாக்கி மூலமும், வெடிகுண்டுமூலமும் பயமுறுத்தி ஆண்டும் வந்தனர். தற்காலத்தில் அது மாறிவிட்டது என்று நான் ஒப்புக்கொள்கிறேன். புதிய பொருளாதார முறையைக் கையாண்ட பின்பு அவ்வளவு நிர்ப்பந்தங்களில்லை.

தோழர் ஸ்காட்டியரிங் ருஷியாவில் எல்லோருக்கும் நியாயமும், சமதர்மமும் கிடைப்பதற்கு அதிக ஹேதுவிருக்கின்றதென்று சொல்லுகின்றார். அந்த மனப்பால் மிகவும் சிறப்பானதென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. ஆயினும் ருஷியாவில் தற்பொழுது கூட அது முற்றிலும் நடைபெறவில்லை. பொருளாதாரமுறையில் மிகவும் விபக்கத் தக்கவிதங்களில் சமதர்மம் ஓங்கியிருக்கின்றது. ஆனால் ராஜீய முறையில் சமதர்மமில்லை. [Political Justice] ராஜீய முறையில் சம தர்மமில்லாததால் சிலரிஷ்டப்பட்டால் பொருளாதார முறையில்கூட சமதர்மமில்லாமல் செய்யக்கூடுமல்லவா?

ஆகையால் ராஜீயவாதிகள் நியாயபுத்தியிலும், தேசபக்தியிலும் பொதுஜனக்கைங்கர்ய வாஞ்சையிலும்தான், போல்ஷ்

விக் முறை நம்பி நடத்தப்படுகிறது. ஆனால் ராஜிய வாதிகளைப்பற்றி நமக்குக் கொஞ்சம் தெரியும். ராஜ்யவாதிகள் ராஜ்யவாதிகள்தான். மேற்கு தேசங்களிலும் சரி, கிழக்குத் தேசங்களிலும் சரி அவர்களெல்லாம் ஒரே ஜாதி. அதுதான் ஓர் பெரும் கஷ்டம். அக்காரணத்தால்தான் எனக்குக் கலவரத்தாலும், அமைதியில்லாத முறைகளாலும் ஏற்படும் நன்மைகளைப்பற்றி நம்பிக்கையில்லை.

மேலும் ருஷியாவிற்கும், நமக்கும் ஓர் பெரிய வித்தியாசம். ருஷியாவில் ஓர் உபயோகமற்ற அரசாங்கமும், ஓர் உபயோகமற்ற பிரபு கோஷ்டியின் அரசாட்சியுமிருந்தன. அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் அதிகாரமுள்ள அரசரும் கிடையாது. மேலும் ராஜாங்க முறைகளில் தேர்ச்சிபெற்ற மிகவும் சாதுர்யமுள்ள பிரபுத்வமும் உயிருடனிருக்கின்றது. இவர்களில் பலர் தங்கள் புத்தியினாலும், சாதுர்யத்தினாலும், நிறைவேற்றும் ஜவாப்தாரித்தனமுள்ள பெரும் நிர்வாகிகளாயிருக்கின்றனர். ஆகையால் ருஷ்ய போல்ஷ்விக்காரர்களைப் போல் இவர்களை நாம் துரத்தவேண்டுமென்றால் நாம் இலகுவில் அதைச் செய்யமுடியாது. மைனாரிட்டியாகவிருந்து கொண்டு இந்தத் தேர்ச்சியடைந்த சாதுர்யம் வாய்ந்த பிரபுத்வத்தை தோற்கடிக்க முடியாது. ஜனங்களின் மனப்பான்மையைத்தான் நாம் முதலில் மாற்றவேண்டும்.

ருஷ்யாவில் அது வேண்டியிருக்கவில்லை. ஜனங்களுக்கு அந்த ஒன்றும் தெரியாது. மேலும் நூற்றாண்டு நூற்றாண்டுகளாகக்கொடுங்கோல் அரசாட்சியின் கீழிருந்ததால் அவர்களுக்குப் பலாத்கார அரசாட்சி முறையைப்பற்றி அவ்வளவு ஆக்ரோஷமில்லை. ஆனால் நாம் குடியிருக்கும் மேற்கு தேசங்

களிலோ பலர் படிப்பாளிகள். ராஜிய முறைகளைத் தினே தினே சாப்பிடும் நேரங்களிலும் பரிசோதிப்பவர்கள். சுயேச்சைப் புத்தியுள்ளவர்கள். மனச்சாட்சியின் விடுதலையில் நம்புகின்றவர்கள். பத்திரிகைகளின் சுயேச்சையை பூஜிக்கின்றவர்கள்.

ருஷ்யாவில் சோவியத் அரசாட்சி புத்தியுள்ள தீவிரவாதிகளின் அரசாட்சி. ஒரே மனித அரசாங்கமுறையிலிருந்து குடியரசு அரசாங்க முறைக்கு ஜனங்கள் பழக்கப்படும் வரையில் இந்தப்புத்தியுள்ள சிலரின் அரசாட்சி நன்மையை அளிக்கும். ஆனால் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் அது பலிக்காது. இங்கு ஜனங்கள் அரசாங்க முறைகளில் தேர்ச்சியடைந்தவர்கள். இங்கு பலாத்காரமாக ராஜியத்தைப் பிடிக்க முயன்றால் ருஷியாவைப்போல் போல்ஷ்விக் பொதுவுடைமைக் கட்சியினரிடத்தில் ராஜ்யம் அகப்படாது. இத்தாலியைப் போல் பேசிஸ்டு [Fascist] கட்சியினர் கையிலகப்படும். இந்த பேசிஸ்டு கட்கியினரை ஆட்டி வைப்பவர்கள் யார்? நான் முன் சொன்ன சாதுர்யமுள்ள புத்தியில் சிறந்த நிறைவேற்று ஜவாப்தாரித்தனமுள்ள நிர்வாகிகள்தான். அவர்களுக்குக்கையிலிருந்த பழம் பாலில் நழுவி விழுந்தாற் போலாகும்.

படிக்கவும் எழுதவும் பெரும்பான்மையோருக்குத் தெரிந்த தேசத்தில் ருஷ்ய முறை கையாளுவது பிரயோஜனமில்லை. ருஷியாவில் தற்காலத்தில் நடந்துவரும் அரசாட்சி முறையை சற்று மதப்பற்றுள்ள முறையென்றே நான் சொல்லுவேன், கிருஸ்துவுக்குப்பதிலாக அவர்கள் மார்க்சைக் கொண்டாடுகிறார்கள். நான் மார்க்ஸ் சொல்லுவதுபோல் பொருளாதார காரணங்கள் மனிதனின் நடத்தையைப்

பெரும்பாலும் தீர்மானிக்கின்றது என்றே சொல்லுவேன். ஆனால் பொருளாதாரக்காரணங்கள் மட்டுமே மனிதனை ஆட்டிவைக்கின்றதென்று நான் சொல்லுவதற்குத்தயாராகவில்லை.

நான் இக் காரணத்தால்தான் போஷவிக்காரர்கள் சாஸ்திர ரீதியாகவில்லையென்று சொல்லுகின்றேன், அவர்கள் வேதம் மார்க்சின் புத்தகம். மார்க்சின் வேதவாக்கு எக்காலத்திலும், எக்காரணத்தைக்கொண்டும் மாற்ற முடியாது. மார்க்சின் காலத்திற்குப்பின் மனித வாழ்க்கையைப்பற்றிபல சமாசாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன, ஆனால் அவையெல்லாம் மார்க்ஸ் வேத புத்தகத்தில் இல்லை. ஆகையால் அவை மனித வாழ்க்கைக்கு முக்யமில்லை. இருபதாம் நூற்றாண்டில் ரோமிலிருக்கும் போப்புகூட இப்படிப்பேசத் துணியமாட்டார்.

ஆகையால்தான் உலக முன்னேற்றம் படிப்படியாகத்தான் ஏற்படவேண்டுமென்று நான் பூரணமாய் நம்புகின்றேன். சரியான முன்னேற்றம் சற்று பொறுமையுடனும், சற்று மெதுவாகவும், சற்று சப்தமில்லாமலும் ஏற்படும். ருஷியாவைப் பின்பற்ற பலருக்கு இருக்கும் ஆசை, சீக்கிரம் இக் கஷ்டங்கள் நிரம்பிய மாற்றம்வேண்டும் என்பதாலும், கரகோஷத்துடன் உலகை சீர்திருத்தவேண்டும் என்ற புத்தியால் ஏற்படுகின்றது. ஆனால் அது முடியாத காரியம். ருஷியாவிலேயே இப்பொழுதுதான் புள்ளிவிவரங்கள் தெளிவாய் முன்னேற்றத்தைக் காண்பிக்கின்றன. பல காரணங்களால் அவர்கள் நினைத்ததை நடத்த முடியவில்லை.

தோழர் நியரிங் சொன்னது போல் பெரும் புயல்காற்றுகள் நம் நாகரீகத்தைத் தாக்கினால், ருஷ்யாவைப்போல்

போல்ஷ்விக்காரர்கள கையில் நம் தேசங்கள் அகப்படா பொது உடைமையாவது, முதலாளித்வமாவது உயிருடனிருக்க முடியாது. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்த ஸ்திதிக்கு ஐரோப்பாவும், அமெரிக்காவும் வந்துவிடும் என்பதில் எனக்கு ஐயமில்லை. நம்மில் சிலர் அம்பும், வில்லும் வைத்துக்கொண்டு பறவைகளையும், மிருகங்களையும் கொன்று தின்று கொண்டு வாழ்வர்.

ருஷியா புத்துயிருடன் எழுந்ததற்குக் காரணம் மற்ற தேசங்கள் ஒருவாறு அத்யாவசிய சாமான்களைச்சிறிது காலத்திற்கு உதவியதால்தான். [இவ்வுதவி மிகவும் கொஞ்சமென்று ரஸல் ஒப்புக்கொள்கின்றார்.] நாகரிக தேசங்களெல்லாம் ஓர் பெரும் யுத்தத்தில் கலந்து ஒருவரையொருவர் மாய்த்துக்கொண்டால் யார் இவர்களுக்கு உதவி புரிய முடியும்?

ஆம். இரண்டாயிர வருட முன்னேற்றத்தைச் சில பைத்தியம் பிடித்த அசடுகள் நாசமாக்க நாம் விட்டிருக்கின்றோம். காகோஷத்துடன், பார்க்கக் கண் பறிக்கத்தக்க விமரிசையுடன், வெகு சீக்கிரம் முன்னேற்றமடையும் காலத்தை நாம் தாண்டிவிட்டோம். தற்பொழுது சிறிது, சிறிதாக அவசரமில்லாமல் நாம் மனித வாழ்க்கையை மேம்படுத்தவேண்டும். அதுதான் என் கொள்கை.